ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1824/29 - 2013 අගෝස්තු මස 23 වැනි සිකුරාදා - 2013.08.23
*1824/29 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான 2 ஆவது பிரிவின்கீழ் நடைபெறும் விசாரணை*

மேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், மேல் மாகாண, மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவில் கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் களனி பிரதேச சபை கருமங்களை மேற்கொள்ளும்போது மேற்குறிப்பிட்ட நியதிச் சட்டத்தில் 2 (1) ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவா என்பதை விசாரணை செய்து அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1795/30 ஆம் இலக்கம் கொண்ட 2013, சனவரி மாதம் 30 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி டட்லி கருணாரத்ன அவர்களைக் கொண்ட தனிநபர் விசாரணை ஆணைக்குழுவின் காலம் யூலை 17 ஆந் திகதி தொடக்கம் ஒற்றோபர் 17 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்கின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சரும் நிதி மற்றும்
திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும்
வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு
தொடர்பான அமைச்சரும்,
மேல் மாகாணம்.

மேல் மாகாணத்தின் முதலமைச்சு,
சிராவஸ்தி மந்திரய,
கொழும்பு 7,
2013, ஓகத்து 09.

9- 147


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.